PAY AND ACCOUNTS OFFICE (EAST) Egmore, Chennai-600 008
30 AUG 2022

கருவூலக் கணக்கு ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்,
தமிழ்நாடு, சென்னை –35.
முன்னிலை: திரு.க.விஜயேந்திர பாண்டியன் இ.ஆ.ப,

செ.மு.ந.க.எண்.002239/2020/எம்1 நாள்.30.08.2022

| | | |
|---|---|---|
| பொருள் | பணியமைப்பு – கருவூலம் மற்றும் கணக்குத் துறை – சென்னை ஓரலகு – திருமதி.கே.வரலட்சுமி, இளநிலை உதவியாளர், சம்பளக் கணக்கு அலுவலகம்(கிழக்கு), சென்னை – பணிநியமனம்– பணிவரன்முறை – ஆணை வழங்கல் | |
| பார்வை | 1. | அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்த (எம்) துறை, நாள்.01.08.2018 |
| | 2 | அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1)த் துறை, நாள்.23.01.2020 |
| | 3 | கருவூலக் கணக்கு கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்), சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.02239/2020/எம்1 நாள்.21.01.2021 |
| | 4 | கருவூலக் கணக்கு கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்), சென்னை அவர்களின் கடித ந.க.எண்.02239/2020/எம்1 நாள்.10.03.2022 மற்றும் 11.05.2022 |
| | 5 | அரசாணை (3ப) எண்.7, நிதி (க.க.2)த் துறை, நாள்.21.07.2022 |

********

**ஆணை:**

கருவூலம் மற்றும் கணக்குத் துறை, சென்னை ஓரலகில் சம்பளக் கணக்கு அலுவலகம் (தெற்கு), சென்னையில் கணக்கராக பணிபுரிந்து 17.07.2019– அன்று பணியிலிருக்கும் போது இயற்கை எய்திய திரு.G.C.சுப்பிரமணியம் என்பவரின் மனைவி திருமதி.கே.வரலட்சுமி என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கிடுமாறு விண்ணப்பித்தததைத் தொடர்ந்து அவரது கல்வித் தகுதியின் அடிப்படையில் கருவூலக் கணக்கு கூடுதல் இயக்குநர்(நிர்வாகம்), சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்து உத்தரவிடப்பட்டு தனியர் சம்பளக் கணக்கு அலுவலகம் (கிழக்கு), சென்னையில் 22.01.2021 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்வது தொடர்பாக, பார்வை 1–இல் காணும் அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்த (எம்) துறை, நாள்.01.08.2018–ல் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவர்களின் பணியை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப்பணியாளர்

Scanned with CamScanner

தேர்வாணையத்தின் இசைவினை பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து பார்வை 3-இல் காணும் செயல்முறை ஆணையில், திருமதி.கே.வரலட்சுமி (காலஞ்சென்ற திரு.G.C.சுப்பிரமணியம், கணக்கர், சம்பளக் கணக்கு அலுவலகம் (தெற்கு), சென்னை என்பவரின் மனைவி கருணை அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல் பிரிவு 17-ன் உட்பிரிவு-1 ன் படி தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டார், மேலும் அச்செயல்முறை ஆணையின்படி தனியர், கருவூல மற்றும் கணக்குத் துறை, சென்னை ஓரலகில் சம்பளக் கணக்கு அலுவலகம் (கிழக்கு), சென்னையில் இளநிலை உதவியாளராக 22.01.2021 முற்பகல் முதல் தற்காலிகமாக பணிபுரிந்து வருகிறார் எனவும்

பார்வை 5-இல் குறிப்பிட்டுள்ள அரசாணையில் வழங்கியுள்ள ஆணைகளின்படி, கருவூலக் கணக்கு துறையில் சென்னை ஓரலகில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ஓராண்டிற்கு மேலாக பணிபுரிந்து வரும் திருமதி.கே.வரலட்சுமி என்பவரின் தற்காலிகப் பணிநியமனமானது, இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும் படியாக உள்ளதாலும், கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்துத் தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும், திருமதி.கே.வரலட்சுமி இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை தனியர் பணியேற்ற நாளான 22.01.2021 முற்பகல் முதல் அவர் அப்பதவிற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைகுட்பட்டு, வரன்முறைப்படுத்தி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், தனியர் பொருட்டு தமிழ்நாடு கருவூலக் கணக்குத் துறை பணிவிதிகளின் படி அன்னாருக்கு தகுதிகாண்பருவம் துவங்குதல் மற்றும் வரையறுக்கப்பட்ட தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதுமிருப்பின் அதனை நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது. தகுதிகாண்பருவம் துவங்கப்பட்டு மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினராக கருதப்படுவார் எனவும் ஆணையிடப்படுகிறது. இவ்வாறு பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் தனியர் அவற்றினைப் பெறத் தகுதியுடையவராகிறார். மேலும் தனியரின்

Scanned with CamScanner

பணிவரன்முறை குறித்து அன்னாரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் உரிய அலுவலர் அவர்களால் மேற்கொள்ளப்படவேண்டும்.

ஒம்/- க.விஜயேந்திர பாண்டியன்
கருவூலக் கணக்கு ஆணையர்

பெறுநர்:

1. திருமதி.கே.வரலட்சுமி,
   இளநிலை உதவியாளர்,
   சம்பளக் கணக்கு அலுவலகம் (கிழக்கு),
   சென்னை.
   (உரிய வழிமுறையாக)
2. சம்பளக் கணக்கு அலுவலர்,
   சம்பளக் கணக்கு அலுவலகம் (கிழக்கு),
   சென்னை.
3. இருப்புக் கோப்பு // உதிரி

// ஆணைப்படி அனுப்பலாகிறது //

முதுநிலை கண்காணிப்பாளர்

Scanned with CamScanner